1974 மார்ச் 22]

பேருந்துகள் போய்க்கொண்டிருக்கின்றன. அது மிகவும் கலகை இருக்கிறது. எனவே, தயவு கூர்ந்து வருகிற ஆண்டிலேயாவது அதற்கு முன்னுரிமை அளித்து பெருவழித் துறையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நிதி வசதிக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்

உத்திராசாக்குட்டையில் ஏரி அமைப்பு

***563 வின.—திரு. வீ. செல்லதுரை:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, சின்ன வடகம்பட்டி, கனவாய்ப்புதூர், உத்திராசாக்குட்டையில் ஏரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. செல்லதுரை: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதியில் அந்த ஏரியைக் கட்டினுல் கிட்டத்தட்ட 500 ஏக்கர் களுக்கு மேல் பாய்வதற்கு வசதியிருக்கிறது. அந்தப் பகுதி வறட்சியான பகுதி. ஆகவே, இனியாவது மறுபரிசீலனை செய்து அந்த ஏரியைக் கட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 500 ஏக்கர்கள் அல்ல, இந்த சின்னவடகம்பட்டி, உத்திராசாக் குட்டையில், அந்தக் குட்டையினுல் பலன் அடையக்கூடிய ஏக்க ராக்கள் சுமார் 46.50 ஆகும். அது சிக்கனமான திட்டமாக இல்லாததால் கைவிடப்பட்டது. மறுபடியும் புனராலோசனை செய்ய வேண்டுமென்று வேறு மாற்று யோசனைகள் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மேல் பொறி யாளர் அதைப்பற்றி ஆராய்ந்து வருகிறுர்.